RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 239 | ஆகஸ்டு.31 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5







# “ஆளுமைமிக்க மூப்பனார் பிரதமர் ஆவதை தடுத்தனர்” மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன்



சென்னை, ஆக.31-

“ஆளுமைமிக்க மூப்பனார் பிரதமர் ஆவதை தடுத்ததை, தமிழகத்துக்கு நடந்த துரோகம் என்று கருதுகிறேன்” என மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மாநில காங்கிரஸ் நிறுவனர் மூப்பனாரின் 24 வது நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள அவரது நினைவிடத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நிர்மலா சீதாராமன், பாஜக தமிழக தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

பின்னர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் பேசியதாவது: எளிமையும், நேர்மையும், தேசியமும் கலந்த ஒரு தேசிய கட்சியின் தலைவராக இருந்தவர் மூப்பனார். அவருக்கு நாடு தழுவிய அளவில் மதிப்பும், மரியாதையும் இருந்தது. ஆளுமைமிக்க மூப்பனார் தமிழகத்துக்கே பெருமை சேர்க்கும் வகையில், பிரதமராக வேண்டிய சந்தர்ப்பம் உருவானது. ஆனால், அவர் பிரதமராக வேண்டிய தருணத்தை அவர்கள் தடுத்தனர். அந்த சக்தி யார் என்று நமக்கு தெரியும்.

தமிழ், தமிழ் கலாச்சாரம், தமிழின் புகழ் என்று திரும்பத் திரும்ப பேசுபவர்கள் தமிழர் பிரதமர் ஆக வேண்டிய அந்த தருணத்தில் ஆதரவு தராமல் தடுத்தனர். இதையும் நாம் மனதில் வைத்து கொள் ணள வேண்டும். இதனை மறக்கவும் முடியாது. ஆளுமைமிக்க மூப்பனார் பிரதமர் ஆவதை தடுத்ததை, தமிழகத்துக்கு நடந்த துரோகம் என்று கருதுகிறேன். அரசியல் இங்கே பேசக் கூடாது. மன்னித்து விடுங்கள். இங்கு புகழஞ்சலி செலுத்த வந்து இருக்கிறோம்.

தமிழகத்தில் மூப்பனாரின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு நல்லாட்சி அமைய நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டிய தருணம் இது. 2026 தேர்தலில் தமிழகத்தில் ஒரு பெரும் மாறுதலை கொண்டு வர வேண்டிய தேவை நமக்கு உள்ளது. தமிழக மக்கள் நல்லாட்சி வேண்டும் என கேட்கிறார்கள். ஒரு குடும்பம் பிழைத்துக் கொண்டிருக்கிறது. இதனால் தமிழ் மக்களுக்கு ஒரு ஆதரவும் இல்லை.

மக்கள் அனைவருக்கும் தொண்டு ஆற்றுவது நமது கடமை. அதனால் உங்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி கைகூப்பி கேட்டுக் கொள்கிறேன். இந்த கூட்டணியை நல்லபடியாக நடத்த வேண்டும். இந்த கூட்டணியின் மூலமாக மக்களுக்கு செய்ய வேண்டிய தொண்டை ஆற்ற வேண்டும். சிறிய, சிறிய உட்பூசலை பற்றி நாம் கவலை கொள்ள தேவையில்லை. முதிர்ச்சியடைந்த பக்குவமாக இருக்கக்கூடிய தலைவர்கள் இங்கு இருக்கின்றனர். எல்லோரும் சேர்ந்து மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# “புதிய வாக்காளர்கள் திமுகவை நோக்கி வருகின்றனர்”

## முதல்வர் ஸ்டாலின் திட்டவட்டம்



சென்னை: ஆக.31-

தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் ஸ்டாலின் இன்று காலை 9 மணிக்கு விமானத்தில் ஜெர்மனிக்கு புறப்பட்டுச் சென்றார்.

துர்கா ஸ்டாலின், முதல்வரின் செயலர்கள், பாதுகாப்பு அதிகாரிகளும் முதல்வர் உடன் செல்கின்றனர். இன்று இரவு 9 மணிக்கு ஜெர்மனி சென்றடையும் அவருக்கு அயலக தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். அங்கு முதலீட்டாளர்களை முதல்வர் நாளை (ஆக.31) சந்திக்கிறார். ஜெர்மனி பயணத்தை முடித்துக்கொண்டு, செப்.1ம் தேதி இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்கு புறப்படுகிறார்.

இந்த நிலையில், சென்னை விமான நிலையம் செல்வதற்கு முன்பாக பத்திரிகையாளார்களை சந்தித்தார் முதல்வர் ஸ்டாலின். அப்போது அவர் பேசியதாவது: “ஒருவாரகால பயணமாக ஜெர்மனி, இங்கிலாந்து செல்கிறேன். இந்த பயணத்தில் தமிழ்நாட்டை நோக்கி தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

2021ல் திமுக ஆட்சிப் பொறுப்பேற்றப் பிறகு இதுவரை 10 லட்சத்துக்கு 62 ஆயிரத்து 752 கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்து 922 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இதன் மூலம் தோராயமாக 32 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் பல நிறுவனங்கள் தயாரிப்பை தொடங்கிவிட்டன. இதன் மூலம் வளர்ச்சி வந்திருக்கிறதா என்று கேட்பவர்களுக்கு, ஒன்றிய அரசு வெளியிடும் புள்ளிவிவரங்களே சாட்சி.

என்னுடைய ஒவ்வொரு வெளிநாட்டு பயணத்திலும் தரவுகளை எடுத்துச் சொல்லி தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்திருக்கிறேன். ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா, ஸ்பெயின், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய ஐந்து நாடுகளுக்கு நான் சென்று வந்ததன் மூலம் ரூ.18,498 கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தமிழ்நாட்டுக்கு கிடைத்துள்ளன.

நாட்டிலேயே அதிவேகமான வளர்ச்சிப் பணிகள் நடைபெறக்கூடிய தமிழ்நாட்டை நோக்கி புதிய முதலீடுகளை ஈர்க்க நான் ஜெர்மனி, இங்கிலாந்துக்கு செல்கிறேன். அதற்கு உங்கள் வாழ்த்துகள் எனக்கு வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் அன்புடன் நான் புறப்பட்டுச் செல்கிறேன்” இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், “எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி இந்த வெளிநாட்டுப் பயணம் குறித்து விமர்சனம் செய்திருக்கிறார். அவரைப் பொறுத்தவரை அவருடைய பயணங்களைப் போலவே இதுவும் இருக்கும் என்று நினைக்கிறார். ஆனால் நான் கையெழுத்திட்ட அனைத்து ஒப்பந்தங்களும் நடைமுறைக்கு வந்துள்ளன.

திமுக கூட்டணிக்கு புதிய கட்சிகள் வருகிறதோ இல்லையோ புதிய வாக்காளர்களை வந்துகொண்டிருக்கின்றனர். அதுதான் உண்மை. பிஹாரில் தேர்தல் ஆணையம் செய்ததைப் போல, தமிழ்நாட்டில் யார் எப்படிப்பட்ட சதி செய்தாலும் அதை முறியடிக்கும் வல்லமை தமிழ்நாட்டுக்கு உண்டு. பிஹாரிலும் கூட மக்களை எழுச்சிப் பெற வைக்க தேர்தல் ஆணையம் உதவி செய்திருக்கிறது”என்று தெரிவித்தார்.

# ட்ரம்ப் வரிக்கு இந்தியா பதிலடி: அமெரிக்காவுக்கான அனைத்து அஞ்சல் சேவைகளும் நிறுத்தம்




புதுடெல்லி, ஆக.31-

அமெரிக்காவுக்கான அனைத்து அஞ்சல் சேவைகளையும் இந்திய தபால் துறை ரத்து செய்துள்ளது.

இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள 25 சதவீத கூடுதல் வரி விதிப்பு கடந்த புதன்கிழமை (ஆக.27) அமலுக்கு வந்தது. ஏற்கெனவே விதித்த 25 சதவீத வரியோடு இந்த கூடுதல் 25 சதவீதமும் சேர்ந்துள்ள நிலையில், 50 சதவீத வரி விதிப்பு இந்தியாவின் ஏற்றுமதியை கடுமையாக பாதிக்கும் என்று நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால், தொழிலாளர் சார்ந்த துறைகள் ஏற்றுமதி 70 சதவீதம் அளவுக்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த வரிவிதிப்புக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவிற்கான அனைத்து அஞ்சல் சேவைகளையும் இந்தியா நிறுத்தியுள்ளது.

கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் 100 டாலர் வரையிலான பரிசுகள் உட்பட அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் அனைத்து வகை அஞ்சல்களையும் நிறுத்தி வைப்பதாக தபால் துறை அறிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் 22 அன்று, 100 டாலர் வரையிலான மதிப்புள்ள ஆவணங்கள்/கடிதங்கள் மற்றும் பரிசுகளைத் தவிர, அமெரிக்காவிற்கு அஞ்சல் சேவைகளை முன்பதிவு செய்தல் மற்றும் அனுப்புவதை ஆகஸ்ட் 25 முதல் நிறுத்தி வைப்பதாகத் துறை தெரிவித்திருந்தது..

முன்னதாக அஞ்சல் துறை வெளியிட்ட அறிவிப்பில் “புதிய விதிமுறைகளின் காரணமாக ஆகஸ்ட் 25க்குப் பிறகு சரக்குகளை ஏற்க முடியாது என்று அமெரிக்காவுக்குச் செல்லும் விமான நிறுவனங்கள் இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளன. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, கடிதங்கள்/ஆவணங்கள் மற்றும் 100 அமெரிக்க டாலர் வரை மதிப்புள்ள பரிசுப் பொருட்கள் தவிர, ஆகஸ்ட் 25 முதல் அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் அனைத்து வகையான அஞ்சல் பொருட்களின் முன்பதிவையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அஞ்சல் துறை முடிவு செய்துள்ளது” என்று கூறப்பட்டிருந்தது.

# தமிழக மக்களுக்கு நல்லாட்சியை வழங்கும்வரை தொண்டர்களுக்கும், எனக்கும் தூக்கமில்லை: இபிஎஸ்



சென்னை, ஆக.31-

தமிழக மக்களுக்கு நல்லாட்சியை வழங்கும் வரை அதிமுக தொண்டர்களுக்கும், எனக்கும் தூக்கமில்லை என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: ‘மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்‘ எனும் எனது எழுச்சிப் பயணத்தை கடந்த ஜூலை 7ம் தேதி தொடங்கி, இதுவரை 118 தொகுதிகளில் சுமார் 60 லட்சம் மக்களை சந்தித்துள்ளேன். இந்தப் பயணத்தின்போது சுமார் 6,728 கிமீ தூரம் வரை பயணம் செய்து மக்களின் எண்ண ஓட்டங்களை உணர்ந்திருக்கிறேன்.

நான் சென்ற இடங்களில் எல்லாம், என்னை ஆர்வமுடன் சந்தித்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், வியாபாரிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினர், தீப்பெட்டி தொழிலாளர்கள், பட்டாசு தொழிலாளர்கள், ஏலகிரி மலைவாழ் பழங்குடியினர் என்று அனைவரையும் சந்தித்து, கலந்துரையாடும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஒவ்வொருவரும் என்னை சந்திக்கும்போது, அதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்கள் குறித்தும், நல்லாட்சி குறித்தும் என்னுடன் மகிழ்ச்சி பொங்க தெரிவித்தனர். அதிமுக ஆட்சி அமைந்ததும், தாலிக்குத் தங்கம் திட்டத்துடன் சேர்த்து பட்டு வேட்டி, சேலை வழங்கப்படும். தீபாவளிக்கு மகளிருக்கு சேலை வழங்கப்படும். சொந்த வீடு இல்லாத ஏழை தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு இடம் வழங்கி, தரமான கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளையும் வெளியிட்டேன்.

ஸ்டாலின் அரசின் மீது தமிழக மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர். திமுக அரசு, தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லத் தவறிவிட்டது. ஸ்டாலினால் இன்று, மக்களின் வாழ்வாதாரம் கண்ணீரும், வலியுமாக மாறிவிட்டது. நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொடுத்து மக்களை 51 மாதங்களுக்கு மேல் ஏமாற்றிவிட்டார்.

`நானும் ஓய்வெடுக்கப் போவதில்லை; உங்களையும் ஓய்வெடுக்க விடப்போவதில்லை’ என்று போலி நம்பிக்கையில் இருக்கும் ஸ்டாலின் 2026ல் இருந்து நிரந்தரமாக ஓய்வெடுக்கப் போகிறார். தமிழகத்தை பீடித்திருக்கும் துயரத்துக்கு 2026ல் முடிவுரை எழுதுவோம். குடும்ப ஆட்சிக்கு ஒரே அடியாக முற்றுப்புள்ளி வைப்போம். மோசமான விளம்பர மாடல் போட்டோ ஷூட் ஸ்டாலின் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம். ஜெயலலிதா மாடல் ஆட்சியை அரியணையில் ஏற்றுவோம்.

நமது எழுச்சிப் பயணத்துக்கு கிடைக்கும் பேராதரவையும், திரளும் மக்கள் வெள்ளத்தையும் பார்த்து, ஸ்டாலினால் பொறுக்க முடியவில்லை. அதனால் நான், எம்ஜிஆர், ஜெயலலிதா போல்நினைத்துக்கொண்டு பேசுவதாகக் கூறுகிறார். `நான் மக்களில் ஒருவன். சாதாரண தொண்டன்.

முன்கள வீரனாக எமது எழுச்சிப் பயணம் தொடரும். தமிழக மக்களுக்கு நல்லாட்சியை வழங்கும் வரை அதிமுக தொண்டர்களுக்கும், எனக்கும் தூக்கமில்லை. அயராது உழைப்போம். 2026 தேர்தலில் அதிமுக வெல்வது உறுதி. செல்லுமிடமெல்லாம் மக்களின் எழுச்சியே வெற்றிக்கு சாட்சி. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# டிஜிபிக்கள் சங்கர் ஜிவால், சைலேஷ் குமார் யாதவுக்கு சென்னையில் பணி நிறைவு பாராட்டு விழா




சென்னை, ஆக.31-

நாளையுடன் பணிஓய்வு பெறவுள்ள டிஜிபிக்கள் சங்கர் ஜிவால் மற்றும் சைலேஷ் குமாருக்கான பிரிவு உபச்சார விழா நேற்று நடைபெற்றது.தமிழக சட்டம்ஒழுங்கு டிஜிபி சங்கர் ஜிவால் இன்று (31ம் தேதி) பணிஓய்வு பெறுகிறார். இதேபோல், மற்றொரு டிஜிபியான, தமிழ் நாடு போலீஸ் ஹவுசிங் கார்பரேசன் லிமிடெட் தலைவராக இருந்த சைலேஷ் குமார் யாதவும் நாளையுடன் பணிஓய்வு பெறுகிறார்.

இதையொட்டி இருவருக்கும் பணிநிறைவு பாராட்டு விழா மற்றும் பிரிவு உபச்சார விழா சென்னையில் நேற்று நடைபெற்றது. போலீஸ் உயர் அதிகாரிகள் மற்றும் ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரிகள் உட்பட ஏராளமானோர் இதில் பங்கேற்று பாராட்டி பேசினர். இதையடுத்து, இருவருக்கும் போலீஸாரின் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. அதை ஏற்றுக் கொண்டபின் சங்கர் ஜிவால் பேசும்போது நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் டிஜிபிக்கள், பிரமோத்குமார், சீமா அகர்வால், சந்தீப்ராய் ரத்தோர், அபய்குமார் சிங், வன்னியபெருமாள், வெங்கடராமன், சட்டம் ஒழுங்கு கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம், சென்னை காவல் ஆணையர் அருண் உள்பட பலர் கலந்து கொண்டனர். சங்கர் ஜிவால் உத்தரகாண்ட் மாநிலம், அல்மோரா மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

பொறியியல் படிப்பை முடித்திருந்த இவர் 1990 பேட்ச் ஐபிஎஸ் அதிகாரி ஆவார். மன்னார்குடி உதவி எஸ்பி, சேலம், மதுரை மாவட்ட எஸ்பி, திருச்சி காவல் ஆணையர், மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு மண்டல இயக்குநர், உளவுப்பிரிவு டிஐஜி, ஐஜி, சிறப்பு அதிரடிப்படை கூடுதல் டிஜிபி என போலீஸ் துறையில் பல்வேறு பதவிகளை வகித்தவர். அயல் பணியாக மத்திய அரசிலும் 8 ஆண்டுகள் பணியாற்றி உள்ளார். சென்னையின் 108வது காவல் ஆணையராக 2 ஆண்டுகள் பணியாற்றி உள்ளார். மெச்சத் தகுந்த பணிக்காக 2 முறை குடியரசுத் தலைவர் பதக்கம் பெற்றவர். இந்நிலையில் 2 ஆண்டுகள் டிஜிபியாக பதவி வகித்த சங்கர் ஜிவால் இன்றுடன் பணிஓய்வு பெறுகிறார்.

தீ ஆணைய தலைவர்: தீ மற்றும் உயிர் மீட்பு பணிகளில் புதிய தொழில் நுட்ப நுணுக்கங்களை செயல்படுத்தும் நோக்குடன் தீ ஆணையம் ஒன்றை தமிழக அரசு அமைத்துள்ளது. அதற்கு தலைவராக சங்கர் ஜிவாலை நியமித்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

டிஜிபி சங்கர் ஜிவால் பதவி காலம் இன்று 31ம் தேதியுடன் நிறைவடையும் நிலையில் நிர்வாக பிரிவு டிஜிபியாக உள்ள வெங்கடராமன், நாளை முதல் சட்டம்ஒழுங்கு பொறுப்பையும் கூடுதலாக கவனிக்க உள்ளதாகவும் அதற்கான அறிவிப்பு வெளியாக உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பாலியல் தொந்தரவு செய்தவருக்கு 12 ஆண்டுகள் சிறை 25 ஆயிரம் அபராதம்

சிவகங்கை, ஆக.31-

சிவகங்கை ராஜாஜி தெருவை சேர்ந்தவர் ரமேஷ் (53) 2022 ம் ஆண்டில் பைனான்ஸ் நடத்தி வந்தார். வீடு தோறும் சென்று வட்டி வசூல் செய்யும் போது, ஒரு பெண்ணிடம் பழக்கம் ஏற்பட்டது. அந்த பெண்ணின் 14 வயது ஒன்பதாவது படித்த மகளுக்கு 2022 ம் ஆண்டில் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். சிறுமியின் தாய் சிவகங்கை மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். காவல்துறையினர் ரமேஷை கைது செய்தனர்.

வழக்கு விசாரணை சிவகங்கை போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி கோகுல் முருகன் முன் நேற்று நடைபெற்றது. ரமேஷ்க்கு 12 ஆண்டு சிறை தண்டனை, ரூ.25,000 அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

சிறுமிக்கு அரசு தரப்பில் ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவிட்டார்.

# சிவகங்கையில் வானவில் மன்ற மீளாய்வுக் கூட்டம்







சிவகங்கை, ஆக.31-

சிவகங்கை மருதுபாண்டியர் நகர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறையின் கூட்டரங்கில் ஆகஸ்ட் 2025 வேலை அறிக்கை சமர்ப்பிக்கும் மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது. வானவில் மன்ற கருத்தாளர் வேணி சொர்ணதேவி வரவேற்றார். பள்ளிக் கல்வித்துறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ பயிற்சியை துவக்கி வைத்து வழிகாட்டுதல்களை வழங்கினார். அமைப்புசார் வானவில் மன்ற ஒருங்கிணைப்பாளர் மாலா பயிற்சியை ஒருங்கிணைப்பு செய்து முக்கிய தகவல்களைக் கூறினார். முதன்மை கருத்தாளர் இணை ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி வானவில் மன்ற கருத்தாளர்களின் கடமைகள் குறித்தும் சந்திரகிரகணம் குழந்தை விஞ்ஞானிகளை உருவாக்கும் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தல் வினாடி வினா போட்டிகள் கிராம அறிவியல் திருவிழா நடத்துவது குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். செப்டம்பர் 7ஆம் தேதி இரவு நடைபெறக்கூடிய சந்திரகிரகண விழிப்புணர்வு பிரச்சார பதாகைகள் வழங்கப்பட்டன. வேலை அறிக்கை முன் பயண அட்டவணை மற்றும் வேலை அறிக்கை தொகுப்பு போன்ற படிவங்கள் ஒப்படைக்கப்பட்டது.

செப்டம்பர் 7ஆம் தேதி இரவு நடைபெறக்கூடிய சந்திர கிரகண நிகழ்வுகளை சிறப்பாக வழிநடத்தி ஏராளமான மக்களுக்கு விண்ணில் நடைபெறும் அதிசயத்தை காணச் செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு அறிவியல் இயக்க பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார். வானவில் கருத்தாளர் புஷ்பவள்ளி நன்றி கூறினார்.

# தேவகோட்டை, ஆனந்தா கல்லூரியில் மரக்கன்று நடும் விழா





சிவகங்கை, ஆக.31-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் மரக்கன்றுகள் நடும் விழா கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன் பேசுகையில், மரக் கன்றுகள் நடுதலின் பயன்கள் ஏராளம். இவை சுற்றுச்சூழலை மேம்படுத்துகின்றன, கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சி, தூய்மையான காற்றை வழங்குகின்றன, மண் அரிப்பைக் குறைக்கின்றன, நிலத்தடி நீர் வளத்தைப் பாதுகாக்கின்றன. மேலும், வனவிலங்குகளுக்கு வாழ்விடங்களை அளிக்கின்றன, பல்லுயிர் பெருக்கத்தை அதிகரிக்கின்றன, மேலும் சமூகப் பிணைப்பை வளர்க்கவும், உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன என்று எடுத்துரைத்தார். பின்பு கல்லூரியில் பயிலும் அனைத்து முதலாமாண்டு மாணாக்கர்களும் தனித்தனியாக ஒவ்வொருவரும் ஒரு மரக்கன்று கல்லூரி வளாகத்தில் நடப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரியின் துணை முதல்வர்கள் அருட்தந்தை முனைவர் டென்சிங் ராஜன், முனைவர் விக்டர் பென வெண்ட்ராஜ் மற்றும் இருபால் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.





# கோவிலம்பாக்கம் ஊராட்சியில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் கட்டுமான பணி துவக்க விழா

சோழிங்கநல்லூர், ஆக.31-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், கோவிலம்பாக்கம் ஊராட்சியில் பொது மக்களுக்கு தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1 கோடி மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் கட்டுமான பணி துவக்க விழா நடைபெற்றது. (ஆகஸ்ட் 30) சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோவிலம்பாக்கம் சமுதாய நலக்கூடத்தில் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சோழிங்கநல்லூர் எம்.எல்.ஏ.,எஸ். அரவிந்த் ரமேஷ் மற்றும் புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர்., கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன் கட்டுமான பணியினை துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் ஒன்றிய பெருந்தலைவர், சங்கீதா பாரதி ராஜன், 5 வது வார்டு கவுன்சிலர், ர. சொக்கலிங்கம், 4 வது வார்டு கவுன்சிலர், கே .வி.விஜயகுமார், தமிழக விவசாயிகள் தொழிலாளர் கட்சி.,மாநில துணை பொதுச்செயலாளர், சு. இந்துமதி உள்ளிட்ட திமுக கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# மாடம்பாக்கம் ட்ரீலீவ்ஸ் பள்ளி சார்பில் தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மினி மாரத்தான் போட்டி: 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்பு






தாம்பரம், ஆக.31-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த மாடம்பாக்கத்தில் உள்ள டிரீலீவ்ஸ் குளோபல் பள்ளி சார்பில் தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு மினி மாரத்தான் போட்டி ட்ரீலீவ்ஸ் பள்ளி நிறுவனர் சரவணன் தலைமையில் நடைப்பெற்றது.

மாணவர்களிடையே விளையாட்டு மீது ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் நடைப்பெற்ற இந்த மாரத்தான் போட்டியினை உலக டிரையத்லான் லெவல் 1 பயிற்சியாளர் வினோலி ராமலிங்கம் கொடியசைத்து மாராத்தனை தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து பச்சை நிற டீசார்ட் அணிந்து சுமார் 500 மாணவர்கள் மாராத்தான் போட்டியில் கலந்துகொண்டனர். மாணவர்களுக்கு ஈடாக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுடன் இணைந்து மாராத்தான் ஓட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த மாரத்தான் மாடம்பாக்கம் டிரீலிவ்ஸ் குளோபல் பள்ளியில் தொடங்கி மாடம்பாக்கம் கோழி பண்ணை வரை சென்று டிரீலிவ்ஸ் குளோபல் பள்ளி வரை சுமார் 5 கிலோமீட்டர் தூரம் நடைப்பெற்றது.

இதில் முதல் 10 இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளை பாராட்டினார்கள் இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் மாணவர்கள் மாணவிகள் ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# அணைக்கட்டு அடுத்த புத்தூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், ஆக.31-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், புத்தூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்து முகாமில் மனு அளித்த பயனாளிகளுக்கு பட்டா பெயர் மாற்ற சான்றிதழை வழங்கினார். இந்த ஆய்வின்போது அணைக்கட்டு வட்டாட்சியர் வேண்டா,அணைக்கட்டு ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் சித்ரா குமரபாண்டியன் வட்டார வளர்ச்சி அலுவலர் ஹேமலதா, புத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் மோகன், உறுப்பினர்கள் மற்றும் அனைத்து துறைகள் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் பொதுமக்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



# இளையான்குடி அருகே சூராணத்தில் நலம் காக்கும் ஸ்டாலின்... சூராணத்தில் எம்எல்ஏ. தமிழரசி தொடங்கி வைத்தார்


இளையான்குடி, ஆக.31-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி இளையான்குடி வட்டம் சூராணத்தில் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் ஆ. தமிழரசி ரவிக்குமார் நேற்று குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்...

இந்நிகழ்ச்சியில் ஒன்றியக்கழக செயலாளர்கள் கிழக்கு வே. தமிழ்மாறன், வடக்கு ஒன்றியக்கழக செயலாளர், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் சுப. மதியரசன் , சிவகங்கை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மருத்துவர் சீனிவாசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்ச்சியில் முன்னிலை வகிக்க, சுற்றுவட்டார கிராமப் பொதுமக்கள் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது மருத்துவ தேவைகளை பெற்றுக்கொண்டனர்...

இதனிடையே கர்ப்பிணி பெண்களுக்கு பெட்டகங்களையும், மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகள் மற்றும் காதுகேட்கும் கருவிகளை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி வழங்கி விழாப் பேருரையாற்றினார்...

இந்த நிகழ்வில் இளையான்குடி கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஆரோக்கியதாஸ், டேவிட், கண்ணன் , கண்ணமங்கலம் கூட்டுறவு சங்க மேனாள் தலைவர் சுப. தமிழரசன், ஐடி விங் தொகுதி ஒருங்கிணைப்பாளர் கி. கண்ணன், சசி பிரசாத், பிரபு உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்...



# சந்திர கிரகணத்தை முன்னிட்டு செப்.7ல் திருச்செந்தூரில் பிற்பகல் வரை அனுமதி: கோயில் நிர்வாகம்

தூத்துக்குடி, ஆக.31-

சந்திர கிரகணத்தை முன்னிட்டு செப்.7ல் திருச்செந்தூர் கோயிலில் பிற்பகல் வரை மட்டுமே அனுமதி வழங்கப்படும் என கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. செப்.7ல் திருச்செந்தூர் முருகன் கோயிலில் பிற்பகல் 2 மணி வரை மட்டுமே பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படும். செப்.8ம் தேதி அதிகாலை 5 மணி முதல் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவர் என கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# காட்பாடி அடுத்த காங்கேயநல்லூரில் திருமுருக கிருபானந்த வாரியார் சிறப்பு குருபூஜை விழா

வேலூர், ஆக.31-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காங்கேய நல்லூரில் அருள்மொழி அருன்மொழி, அரசு, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் அவதார நாள் வழிபாடு குருபூஜை சிறப்பு விழா, தொண்டை மண்டலம் தலைவர் கே.எம். பாலு தலைமையில் நடைபெற்றது. இதில் மயிலம் ஸ்ரீல ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் தவத்திரு இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், கலவை தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள் ஆகியோர் அருளாசியுடன் நடைபெற்றது. விழாவில் திரு. புகழனார், விழா குழுவினர்கள், ஊர் பொதுமக்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# கே.வி.குப்பம் தாலுகாவில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம்

## மாவட்ட ஆட்சியர் மற்றும் எம்பி கதிர்ஆனந்த் ஆகியோர் பங்கேற்று சிறப்பு பார்வை

வேலூர், ஆக.31-

வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் தாலுகா, பனமடங்கி ஊராட்சியில், நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமை, மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கதிர்ஆனந்த்

ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு மருத்துவ முகாமை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் போது கீ.வ.குப்பம் ஒன்றிய குழு தலைவர் ரவிச்சந்திரன், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு. பரணிதரன், இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு. பியூலா, துணைத் தலைவர் பாரதி வெங்கடேசன், மாவட்ட ஊராட்சிக்குழுத் உறுப்பினர் கவிதா சுதா சேகர், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சீதாராமன், ஜெயா முருகேசன், ஊராட்சி மன்ற தலைவர் மகாலட்சுமி வெங்கடேசன், வட்டாட்சியர் பலராமன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜன்பாபு, பெருமாள் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வேலூரில், பாரத் காலேஜ் ஆப் எஜுகேசன் சார்பில் பி.எட். மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா

வேலூர், ஆக.31-

வேலூர் மாவட்டம், வேலூர், கொசப்பேட்டை, பாரத் காலேஜ் ஆப் எஜுகேசன் சார்பில் பி.எட். மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா, பாரத் காலேஜ் ஆப் எஜுகேஷன் கல்லூரி நிறுவனத் தலைவர் டாக்டர். சி.இந்திரநாத் தலைமையிலும், கல்வி குழும தலைவர் பிலோமினா இந்திரநாத், கல்லூரி முதல்வர் பி.எஸ். சசிரேகா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்த்குமார் கலந்து கொண்டு, பட்டம் பெரும் மாணவர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்து பி.எட். முடித்த 80 மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் துணை தலைவர் ஐ.சந்தோஷ், வைஸ் ப்ரெசிடெண்ட் ஐ.சுனில், கல்லூரி அட்மினிஸ்ட்ரேஷன் மேலாளர் ஜே. ரஞ்சித்குமார், பாரத் கல்வி குழுமம் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பட்டம் பெரும் மாணவர்களின் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.




## தீபாவளி வெளியீட்டில் இணைந்தது ‘டீசல்’

ஹரிஷ் கல்யாண் நடித்துள்ள ‘டீசல்’ திரைப்படம் தீபாவளிக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சண்முகம் முத்துசுவாமி இயக்கத்தில் ஹரிஷ் கல்யாண் நடிப்பில் உருவாகி வந்த படம் ‘டீசல்’. இப்படம் நீண்ட காலமாக தயாரிப்பில் இருக்கிறது. சமீபத்தில் இதன் பாடலொன்று இணையத்தில் பெரும் வைரலானது. இதனைத் தொடர்ந்து இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமானது.

தற்போது ‘டீசல்’ தீபாவளிக்கு வெளியாகும் என்று படக்குழுவினர் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர். மேலும், படத்தின் டீஸர் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். இதற்கு இணையத்தில் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. இப்படத்தின் மூலம் ஆக்ஷன் நாயகனாக மாறியிருக்கிறார் ஹரிஷ் கல்யாண்.

தேர்டு ஐ நிறுவனம் மற்றும் எஸ்பி சினிமாஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள படம் ‘டீசல்’. இதில் அதுல்யா ரவி, வினய் ராய், சாய் குமார், கருணாஸ், ரமேஷ் திலக் உள்ளிட்ட பலர் ஹரிஷ் கல்யாண் உடன் நடித்துள்ளனர். திபு நினன் தாமஸ் இசையமைப்பாளராக பணிபுரிந்துள்ளார்.



## ரிரிலீஸ் ஆகும் ‘ரன்’

மாதவன் நடிப்பில் மாபெரும் வரவேற்பைப் பெற்ற ‘ரன்’ திரைப்படம் மீண்டும் ரிரிலீஸ் ஆகவுள்ளது.

லிங்குசாமி ஸ்ரீ மாதவன் கூட்டணியில் வெளியான படம் ‘ரன்’. 2002ம் ஆண்டு வெளியான இப்படம் மாபெரும் வரவேற்பைப் பெற்று வசூல் சாதனை புரிந்தது. இதன் பாடல்கள், வசனங்கள், காதல் காட்சிகள், சண்டைக் காட்சிகள் என அனைத்துமே கொண்டாடப்பட்டது. ஏ.எம்.ரத்னம் இப்படத்தினை தயாரித்து வெளியிட்டார்.

தற்போது வரவேற்பைப் பெற்ற படங்கள், மீண்டும் வெளியிடப்பட்டு வெற்றி பெறுவது வாடிக்கையாகிவிட்டது. இந்த வரிசையில் ‘ரன்’ படமும் இணைந்திருக்கிறது. படத்தினை தற்போதைய தொழில்நுட்பத்துக்கு ஏற்றவகையில் மாற்றி வெளியிடவுள்ளார்கள். இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மீரா ஜாஸ்மின், ரகுவரன், அதுல் குல்கர்னி, விவேக் உள்ளிட்ட பலர் மாதவனுடன் நடித்திருந்த படம் ‘ரன்’. இதற்கு ஒளிப்பதிவாளராக ஜீவா, இசையமைப்பாளராக வித்யாசாகர், எடிட்டராக வி.டி.விஜயன் ஆகியோர் பணிபுரிந்திருந்தனர்.



## விஷால் – தன்ஷிகா திருமண நிச்சயதார்த்தம்: பிரபலங்கள் வாழ்த்து

தனக்கும் தன்ஷிகாவுக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றதாக விஷால் புகைப்படத்துடன் அறிவித்துள்ளார்.

சமீபத்தில் தன்ஷிகாவை காதலித்து வருவதை உறுதிப்படுத்தினார் விஷால். இதனைத் தொடர்ந்து திரையுலக பிரபலங்கள் பலரும் விஷால் ஸ்ரீ தன்ஷிகா இணைக்கு வாழ்த்து தெரிவித்தார்கள். எங்களது திருமணம் நடிகர் சங்கத்தின் புதிய கட்டிடத்தில் முதல் திருமணமாக நடைபெறும் என்று விஷால் பத்திரிகையாளர் சந்திப்பில் அறிவித்திருந்தார்.

இன்று தனது பிறந்த நாளை முன்னிட்டு மதியம் 12 மணிக்கு முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதாக விஷால் தெரிவித்திருந்தார். அதன்படி தனது எக்ஸ் தளத்தில் விஷால், “இந்த பிறந்த நாளில் உலகின் அனைத்து மூலைகளில் இருந்தும் எனக்கு வாழ்த்து கூறி ஆசீர்வதித்த அனைவருக்கும் நன்றி.

இன்று எங்கள் குடும்பங்கள் சூழ எனக்கும் தன்ஷிகாவுக்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்ற சந்தோஷமான செய்தியை உங்கள் அனைவருடனும் பகிர்ந்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். நான் உற்சாகத்துடன், நம்பிக்கையுடன், ஆசீர்வதிக்கப்பட்டவனாக உணர்கிறேன்” என்று தெரிவித்துள்ளார் விஷால். இந்த அறிவிப்புக்கு திரையுலக பிரபலங்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

## இணையத்தில் வைரலான புதிய வீட்டின் வீடியோ: அலியா பட் காட்டம்





தனது புதிய வீட்டின் வீடியோ பதிவொன்று இணையத்தில் வைரலானதால் அலியா பட் காட்டமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மும்பையில் ரன்பீர் கபூர் ஸ்ரீ அலியா பட் இணை பிரம்மாண்டமான அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றை கட்டியிருக்கிறார்கள். விரைவில் இதில் குடும்பத்துடன் குடியேற இருக்கிறார்கள். இதன் இறுதிகட்ட பணிகள் நடைபெற்று வரும் சமயத்தில், இந்த குடியிருப்பின் வீடியோ பதிவுகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

பல்வேறு வழிகளில் இருந்து அடுக்குமாடி குடியிருப்பின் வீடியோக்கள் இணையத்தில் உலா வருகின்றன. இது தொடர்பாக காட்டமாக அறிக்கை ஒன்றை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார் அலியா பட். அதில், “மும்பை போன்ற ஒரு நகரத்தில் இடம் குறைவானது என்பதை நான் புரிந்துக் கொள்கிறேன். சில நேரங்களில் உங்கள் ஜன்னலின் பார்வை அடுத்தவர் வீடாக இருக்கலாம். ஆனால் அதற்காக எவருக்கும் தனிப்பட்ட வீடுகளை படம் பிடித்து ஆன்லைனில் வெளியிடும் உரிமை இல்லை.

எங்கள் வீடு இன்னும் கட்டுமானத்தில் தான் உள்ளது. அதற்குள் எங்கள் அனுமதி இல்லாமல் படமெடுக்கப்பட்டு பல்வேறு ஊடகங்களால் பகிரப்பட்டுள்ளது. இது தனியுரிமை மீறலும், பாதுகாப்பு சிக்கலுமாகும். இது மிகவும் கண்டிக்கத்தக்கது. ஒருவரது தனிப்பட்ட இடத்தை அவர்களின் அனுமதி இல்லாமல் படம் எடுப்பதும் அல்லது புகைப்படம் எடுப்பதும் அத்துமீறலாகும்.

இதனை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. அதனை பகிரும் முன் சற்று யோசிக்கவும். உங்கள் வீட்டின் உள்ளே எடுக்கப்பட்ட வீடியோ பதிவொன்றை ஒருவர் தெரியாமல் பொது இடத்தில் பகிரப்பட்டால் நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா? யாருமே ஒப்புக் கொள்ளமாட்டோம். ஆகையால் ஒரு வேண்டுகோள். மற்றவர்களின் வீடியோ பதிவுகளை நீங்கள் இணையத்தில் பார்த்தால், தயவுசெய்து அதை பகிர வேண்டாம் அல்லது மற்றவர்களுக்கு அனுப்ப வேண்டாம்.

எங்களது வீட்டின் புகைப்படங்களையும் வீடியோக்களையும் பகிர்ந்த ஊடக நண்பர்கள், தயவுசெய்து அவற்றை உடனடியாக நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார் அலியா பட்.

## ஆசிய கோப்பை 2025 தொடரில் உடைக்க முடியாத 10 சாதனைகள்.. ரோகித், கோலிக்கு எந்த இடம்

ஆசிய கோப்பை தொடர் வரும் செப்டம்பர் ஒன்பதாம் தேதி ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இந்த தொடரில் நடப்பு சாம்பியன் இந்தியா,பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், ஆப்கானிஸ்தான், ஓமன், ஐக்கிய அரபு அமீரகம், ஹாங்காங் ஆகிய அணிகள் விளையாடுகின்றன. அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் டி20 உலக கோப்பை நடைபெறுவதால் அதற்கு தயாராகும் விதமாக இந்த தொடர் இம்முறை டீ20 போட்டிகளாக நடத்தப்படுகிறது. இந்த நிலையில் ஆசிய கோப்பை வரலாற்றில் யாராலும் உடைக்க முடியாத 10 சாதனைகள் குறித்து தற்போது பார்க்கலாம். இந்த பட்டியலில் பத்தாவது இடத்தில் பாகிஸ்தான் அணி ஒரே போட்டியில் 38 எக்ஸ்ட்ரா ரன்களை இரண்டு முறை வழங்க இருக்கின்றது. இந்த இரண்டு போட்டியிலும் பாகிஸ்தான் தோல்வியை தழுவியது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று இந்த பட்டியலில் ஒன்பதாவது இடத்தில் இந்திய அணி இருக்கின்றது. ஹாங்காங் எதிரான போட்டியில் இந்திய அணி 256 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதில் சுரேஷ் ரெய்னா 68 பந்துகளில் 101 ரன்கள் அடித்து சாதனை படைத்தார். இந்த சாதனை இன்னும் யாராலும் உடைக்க முடியாத படி இருக்கின்றது. இந்தப் பட்டியலில் எட்டாவது இடத்தில் ரோகித் சர்மா இருக்கின்றார். ரோகித் சர்மா இந்த தொடரில் அதிகபட்சமாக 40 சிக்ஸர்கள் அடித்து இருக்கின்றார். அதற்கு அடுத்தபடியாக பாகிஸ்தான் வீரர் அப்ரிடி 26 சிக்ஸர்களுடன் உள்ளார். இந்த பட்டியலில் ஏழாவது இடத்தில் மலிங்கா இருக்கின்றார். மலிங்கா மூன்று முறை இந்த தொடரில் 5 விக்கெட்டுகளை கைப்பற்றி இருக்கின்றார். இந்த மூன்றுமே பாகிஸ்தானுக்கு எதிராக தான் அவர் நிகழ்த்தி இருந்தார். இந்த பட்டியலில் ஆறாம் இடத்தில் முத்தையா முரளிதரன் இருக்கின்றார். ஆசிய கோப்பை வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரராக முரளிதரன் இருக்கின்றார். முரளிதரன் 30 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் மெண்டிசும், ஜடேஜாவும் இருக்கின்றனர். இருவரும் டி20 போட்டிகளில் ஓய்வு பெற்று இருப்பதால் இனி அடுத்த முறை 50 ஓவர் போட்டியாக ஆசிய கோப்பை தொடர் நடைபெற்று, அதில் ஜடேஜா பங்கேற்றால் மட்டுமே இந்த சாதனையை தகர்க்க முடியும். இந்த பட்டியலில் ஐந்தாவது இடத்தில் ஜெயசூர்யா இருக்கின்றார். ஜெயசூர்யா ஒரே தொடரில் 378 ரன்கள் அடித்திருக்கிறார். 2008 ஆம் ஆண்டு அவர் இந்த சாதனையை படைத்தார். இந்த சாதனையை இன்னும் யாராலும் தகர்க்க முடியவில்லை. இந்த பட்டியலில் நான்காவது இடத்தில் மீண்டும் ஜெயசூர்யா தான் இருக்கின்றார். ஜெயசூர்யா ஆசிய கோப்பை வரலாற்றில் அதிகபட்சமாக 6 சதம் அடித்திருக்கின்றார். இந்த பட்டியலில் விராட் கோலி ஐந்து சதத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். விராட் கோலி டி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றிருப்பதால், நடப்பு தொடரில் அவர் இந்த சாதனையை முறியடிக்க முடியாது. வேண்டுமென்றால் அடுத்த முறை ஆசிய கோப்பை 50 ஓவர் போட்டியாக நடைபெறும் போது விராட் கோலி இந்த ரெக்கார்டை முறியடிக்கலாம். ஆனால் அதற்கு விராட் கோலி கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறாமல் இருக்க வேண்டும். இந்த பட்டியலில் மூன்றாம் இடத்தில் விராட் கோலி ஒரே இன்னிங்ஸில் 183 ரன்கள் அடித்தது ஆசியக் கோப்பை வரலாற்றில் அடிக்கப்பட்ட அதிகபட்ச தனி நபர் ஸ்கோர் ஆகும். இதற்கு இரண்டாவது இடத்தில் பாபர் அசாம் 151 ரன்களுடன் நேபாள் அன்னிக்கு எதிராக அடித்திருந்தார். இந்த பட்டியலில் இரண்டாவது இடத்தில் மெண்டிஸ் இருக்கின்றார். இலங்கை வீரர் மெண்டிஸ் 2008 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக ஒரே இன்னிங்சில் ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதற்கு அடுத்தபடியாக சிராஜ் ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தினாலும் மெண்டிஸ் குறைந்த ரன்கள் மட்டுமே விட்டுக் கொடுத்திருந்தார். இந்த பட்டியலில் முதலிடத்தில் ரோகித் சர்மா இருக்கின்றார். ஆசிய கோப்பை வரலாற்றில் அதிக போட்டிகள் விளையாடிய வீரர் என்ற பெருமை ரோகித்திடம் இருக்கிறது. ரோகித் 28 ஒரு நாள், ஒன்பது டி20 என மொத்தம் 37 போட்டிகள் விளையாடி இருக்கின்றார். இந்த பட்டியலில் இரண்டாவது இடத்தில் ஜடேஜா 26 போட்டியுடன் உள்ளார். இதனால் ரோகித்தின்இந்த சாதனையை முறியடிக்க பல ஆண்டுகள் ஆகலாம்.

## குளோபல் செஸ் லீக் காண்டெண்டர்ஸ்: செப்.12ல் தொடக்கம்



செஸ் உலகில் முதல் முறையாக, டெக் மஹிந்திரா மற்றும் ஃபிடே இணைந்து குளோபல் செஸ் லீக் தொடரை நடத்தி வருகிறது. இதன் 3வது சீசன் வரும் டிசம்பர் 13ம் தேதி தொடங்குகிறது. முதன்முறையாக இந்த தொடர் இந்தியாவில் நடத்தப்பட உள்ளது. ஆனால் போட்டியை நடத்தும் நகரம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இந்நிலையில் இந்தத் தொடரில் இளம் வீரர்கள் கலந்து கொள்ளும் வகையில் ‘குளோபல் செஸ் லீக் காண்டெண்டர்ஸ் 2025’ என்ற உலகளாவிய தொடர் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த போட்டி வரும் செப்டம்பர் 12 முதல் அக்டோபர் 11 வரை ஆன்லைனில் நடைபெறுகிறது.

அமெச்சூர் மற்றும் தொழில்முறை வீரர்கள் கலந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த போட்டி பல நிலைகளைக் கொண்டது. இந்தத் தொடரில் பங்கேற்பதற்கான பதிவு நேற்று (ஆகஸ்ட் 28ம் தேதி) தொடங்கி உள்ளது. விருப்பம் உள்ளவர்கள் https://contenders.globalchessleague.com/ என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம். ஆடவர், மகளிர், யு21 என 3 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறும். இந்த 3 பிரிவுகளிலும் வெற்றி பெறுபவர்கள் குளோபல் செஸ் லீக் 3வது சீசனில் கலந்து கொள்ள தகுதி பெறுவார்கள்.



## இறுதிப் போட்டிக்கு பிரக்ஞானந்தா தகுதி

அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் சின்க்ஃபீல்ட் கோப்பைக்கான செஸ் தொடர் நடைபெற்றது. 9 சுற்றுகள் கொண்ட இந்த தொடரின் முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா, அமெரிக்காவின் வெஸ்லி சோ, பேபியானோ கருனா ஆகியோர் தலா 5.5 புள்ளிகளை பெற்றனர். இதனால் வெற்றியாளரை தீர்மானிக்க டைபிரேக்கர் ஆட்டம் நடத்தப்பட்டது. இதில் பிரக்ஞானந்தா முதல் ஆட்டத்தில் பேபியானோ கருனாவை வீழ்த்தினார்.

ஆனால் அடுத்த ஆட்டத்தில் வெஸ்லி சோவிடம் தோல்வி அடைந்தார். வெஸ்லி சோ தனது 2வது டை பிரேக்கர் ஆட்டத்தில் பேபியானோ கருனாவுடன் டிரா செய்தார். இதனால் வெஸ்லி சோ 1.5 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து சாம்பியன் பட்டம் வென்றார். பிரக்ஞானந்தா 2வது இடத்துடன் தொடரை நிறைவு செய்தார். இந்த தொடரில் 2வது இடம் பிடித்ததன் மூலம் பிரக்ஞானந்தா கிராண்ட் செஸ் டூரின் இறுதி போட்டிக்கு தகுதி பெற்றார்.

## கடைசி 10 நிமிடத்தில் நிகழ்ந்த பரபரப்பு.. முதல் ஆட்டத்திலேயே சாதித்த தமிழ் தலைவாஸ்



புரோ கபடி லீக் 12வது சீசனில் முதல் ஆட்டத்தில் தமிழ் தலைவாஸ் மற்றும் தெலுங்கு டைட்டன்ஸ் அணி விசாகப்பட்டினத்தில் பலப் பரிட்சை நடத்தியது. விறுவிறுப்புக்கு பஞ்சம் இல்லாத இந்த ஆட்டத்தில் தமிழ் தலைவாஸ் அணி மூன்று புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வெற்றியுடன் தொடரை தொடங்கியுள்ளது. ஆட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே இரு வீரர்களும் அபாரமாக செயல்பட்டனர். முதல் ஐந்து நிமிடத்தில் இரு அணிகளும் தலா நான்குக்கு நான்கு என்ற ஸ்கோரில் இருந்தது. இந்த தருணத்தில் தமிழ் தலைவாஸ் அணி கொஞ்சம் சரிவை சந்திக்க தெலுங்கு டைட்டன்ஸ் அணி ஸ்கோரில் முன்னிலை பெற்றது.

தமிழ் தலைவாஸ் ஒவ்வொரு புள்ளிகளை பெற முயற்சி செய்த போதெல்லாம், தெலுங்கு டைட்டன்ஸ் அணி புள்ளிகளை வாரி குவித்தது. ஒரு கட்டத்தில் முதல் பாதி முடிவில் தமிழ் தலைவாஸ் 14க்கு 13 என்ற கணக்கில் இருந்தது. இதை அடுத்து இரண்டாவது பாதி தொடங்கிய போது தெலுங்கு டைட்டன்ஸ் அணி புள்ளிகளை வாரி குவித்தது.

இதனால் தமிழ் தலைவாஸ் அணி தடுமாறியது. ஒரு கட்டத்தில் தெலுங்கு அணி 20 புள்ளிகளையும், தமிழ் தலைவாஸ் அணி 15 புள்ளிகளையும் தான் பெற்றிருந்தது. தமிழ் தலைவாஸ் அணி எவ்வளவு போராடியும் புள்ளி வித்தியாசத்தை குறைக்க முடியவில்லை. தமிழ் தலைவாஸ் அணி 20 புள்ளிகளை பெறும்போது எல்லாம் தெலுங்கு டைட்டன்ஸ் அணி 25 புள்ளிகளை பெற்றது.

இந்த தருணத்தில் ஆட்டத்தின் கடைசி 10 நிமிடங்களில் தமிழ் தலைவாஸ் அணி தங்களுடைய அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்தி புள்ளிகளை அடுத்தடுத்து குவித்தது. போட்டி முடிய வெறும் 4 நிமிடங்கள் மட்டுமே இருந்த நிலையில் தமிழ் தலைவாஸ் அணி 31 புள்ளிகளை பெற்று தெலுங்கு டைட்டன்ஸ் விட இரண்டு புள்ளிகள் முன்னிலை பெற்றிருந்தது. வெற்றிக்காக இரு அணிகளும் கடுமையாக போராடிய நிலையில் கடைசி சில நிமிடங்களில் அபாரமாக செயல்பட்டு தமிழ் தலைவாஸ் 38க்கு 35 என்ற புள்ளிகளில் பெற்று வெற்றி பெற்றது. தமிழ் தலைவாஸ் அணி இந்த போட்டியில் பின்தங்கி இருந்த நிலையில் அபாரமாக வென்றது. தமிழ் தலைவாஸ் அணியில் அர்ஜுன் தேஷ்வால் அதிகபட்சமாக 12 புள்ளிகளையும், பவன் சேரவாத் ஒன்பது புள்ளிகளையும் பெற்றனர்.

தெலுங்கு டைட்டன்ஸ் அணியில் பரத் அதிகபட்சமாக 11 புள்ளிகளையும் விஜய் மாலிக் 6 புள்ளிகளையும் பெற்றனர். தமிழ் தலைவாஸ் அணி அடுத்ததாக மும்பை அணியை வரும் ஞாயிற்றுக்கிழமை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டிகள் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் மற்றும் ஜியோ ஹாட்ஸ்டாரில் ஒளிபரப்பு ஆவது குறிப்பிடத்தக்கது



## வேலூர், ஊரீஸ் கல்லூரியில் பாதுகாப்பு மற்றும் தொடக்க ஆய்வுகள் துறை முன்னாள் மாணவர்கள் சந்திப்பு சிறப்பு விழா

வேலூர், ஆக.31-

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை, ஊரீஸ் கல்லூரி சி.எஸ்.ஐ. மறை மாவட்டம், வேலூர், பாதுகாப்பு மற்றும் தொடக்க ஆய்வுகள் துறை சார்ந்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு சிறப்பு விழா, (19762025) ஊரீஸ் கல்லூரி கூட்டரங்கில். முன்னாள் தலைவர் - துணை முதல்வர் ரேவ். டாக்டர். ஷர்மா நித்யானந்தம் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு காவல் துறை முன்னாள் இயக்குநர் ஜெனரல் டி.கே.ராஜேந்திரன் ஐ.பி.எஸ்., கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) ஆணீகமலா ஃப்ளோரன்ஸ், துணை முதல்வர் குமார், துணை முதல்வர் (பொறுப்பு) ஸ்டான்லி ஜோன்ஸ் கருணாகரன், கன்வேனர் பாதுகாப்பு மற்றும் தொடக்க ஆய்வுகள் துறை டி.திருமாறன் மற்றும் முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## பம்மல் வடக்கு பகுதி 1வது மண்டலத்திற்கு உட்பட்ட 29வது வார்டு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்

திருநீர்மலை, ஆக.31-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலத்திற்கு உட்பட்ட 29வது வார்டு பொதுமக்களின் சேவைகள் திட்டங்களை அவர்கள் பகுதியிலேயே வழங்கிடும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு விழாவை துவக்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத்தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி, பம்மல் வடக்கு பகுதி கழக செயலாளர் த.ஜெயகுமார், இணை ஆணையாளர் சொர்ணலதா, உதவி செயற் பொறியாளர் சத்தியசீலன், 29வது வார்டு மாமன்ற உறுப்பினர் சண்முக சுந்தரி ஜெயகுமார், சுகாதார ஆய்வாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர், துறை சார்ந்த அதிகாரிகள், பகுதி, வட்ட கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு முகாமை சிறப்பித்தனர்.

## "இந்தியா ஒருபோதும் தலைவணங்காது" அமெரிக்காவின் வரி உயர்வுக்கு பியூஷ் கோயல் பதிலடி

துடெல்லி, ஆக.31-

இந்தியா ஒருபோதும் தலைவணங்காது, பலவீனமாகவும் நிற்காது என்று அமெரிக்காவின் வரி உயர்வுக்கு பியூஷ் கோயல் பதில் அளித்துள்ளார்.



டெல்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பியூஷ் கோயல், "தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்துக்கு இந்தியா தயாராக இருக்கிறது. ஆனால், இந்தியா ஒருபோதும் தலைவணங்காது, பலவீனமாகவும் நிற்காது. நாங்கள் தொடரந்து புதிய சந்தைகளைக் கைப்பற்றுவோம்.

அமெரிக்காவின் வரி விதிப்பால் பாதிக்கப்படும் ஒவ்வொரு துறையையும் ஆதரிப்பதற்கும், ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் வரும் நாட்களில் மத்திய அரசு பல நடவடிக்கைகளை அறிவிக்கும். 202526 நிதி ஆண்டின் இந்திய ஏற்றுமதி, 202425ஐ காட்டிலும் அதிகமாக இருக்கும். இதை என்னால் நம்பிக்கையுடன் சொல்ல முடியும்" என தெரிவித்துள்ளார். அமெரிக்கா விதித்த கூடுதல் 25 சதவீத வரி கடந்த 27ம் தேதி முதல் அமலுக்கு வந்ததை அடுத்து, பியூஷ் கோயல் முதல்முறையாக இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

இந்திய பொருட்களுக்கு ஏற்கெனவே 25 சதவீத வரி விதித்த ட்ரம்ப், ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை காரணம் காட்டி கூடுதலாக 25 சதவீதம் வரியை விதித்து 50 சதவீதமாக உயர்த்தினார். ட்ரம்ப்பின் இந்த நடவடிக்கையால், இந்தியா அமெரிக்கா இடையே நடைபெற இருந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தை தற்போது தடைபட்டுள்ளது. மேலும், அமெரிக்காவுக்கான இந்திய ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அமெரிக்க காங்கிரஸின் (நாடாளுமன்றத்தின்) ஒப்புதல் இன்றி பல்வேறு நாடுகள் மீது அதிக வரிகளை விதித்த ட்ரம்ப்பின் உத்தரவுகளை அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. நீதிமன்றம் தனது உத்தரவில், "உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கு எதிராகவும் ட்ரம்ப் அதிக வரிகளை விதித்துள்ளார். இதை நியாயப்படுத்தவே, தேசிய அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. ட்ரம்ப்பின் பெரும்பாலான வரிவிதிப்பு சட்டவிரோதமானது. கூடுதல் வரி விதிப்பை நீக்க வேண்டும்.

வரிகள் விதிப்பு, அடிப்படையில் காங்கிரஸின் அதிகாரத்துக்கு உட்பட்டது. அது வரி விதிப்பில் அதிபருக்கு சில அதிகாரங்களை வழங்கி உள்ளது. எனினும், வரம்பற்ற அதிகாரத்தை அதிபருக்கு காங்கிரஸ் வழங்கவில்லை. அத்தகைய நோக்கத்தை காங்கிரஸ் கொண்டிருக்கவில்லை." என்று தெரிவித்துள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு டொனால்ட் ட்ரம்ப் அதிருப்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "அனைத்து வரி விதிப்புகளும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளன. இந்த வரிகள் நீக்கப்பட்டால் அது நாட்டுக்கு ஒரு முமையான பேரழிவாக இருக்கும். இந்த தீர்ப்பு உறுதிப்படுத்தப்படுமானால் அது அமெரிக்காவை அழித்துவிடும்." என்று கடுமையாக விமர்சித்துள்ளார்.

பல்லாவரம் மறைமலை அடிகளார் பள்ளியில் ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டில் மெட்ராஸ் ரவுண்டு டேபிள் 1 மூலம் கட்டப்பட்ட

## புதிய வகுப்பறை கட்டிடத்தை எம்எல்ஏ இ.கருணாநிதி, மெட்ராஸ் ரவுண் டேபிள் 1 முன்னாள் சேர்மன் வருண் ஆச்சார்யா, தற்போதைய சேர்மன் சிரிஷ் பாலகிருஷ்ணா பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்

பல்லாவரம், ஆக.31-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் மறைமலை அடிகளார் மேல்நிலைப்பள்ளி உள்ளது.

இங்கு 1250க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

அதுமட்டுமின்றி இந்த பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் 12ம் வகுப்பு தேர்வுகளில் 90 சதவீதத்திற்கு மேல் தேர்ச்சி பெற்று வருவது வழக்கம்.

அந்த வகையில் கடந்த ஆண்டு 12ம் வகுப்பில் 94 சதவீதம் மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றனர்.



இதனை தொடர்ந்து 2025 2026ம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கையில் 11 மற்றும் 12ம் வகுப்புகளில் மற்ற பள்ளிகளை விட அதிக அளவிலான மாணவ, மாணவிகள் பல்லாவரம் மறைமலை அடிகளார் பள்ளியில் சேர்ந்தனர்.

இதனால் 11 மற்றும் 12ம் வகுப்புகளில் மட்டும் தற்போது 550க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

ஆனால் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பள்ளியில் போதுமான வகுப்பறைகள் இல்லாததால் கூடுதல் வகுப்பறை கட்டிடம் அமைத்துத் தர வேண்டும் என மாணவ மாணவிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மெட்ராஸ் ரவுண்டு டேபிள் 1 சார்பில் ரூபாய் ஒரு கோடியே, 20 லட்சம் மதிப்பீட்டில் 8 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடம், ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் 8 வகுப்பறைகளுக்கும் தேவையான பெஞ்ச் டெஸ்க், டேபிள், சேர், கீரின் போர்டு, மின்விசிறி, மின் விளக்குகள், அலமாறி மற்றும் சிசிடிவி கேமரா உள்ளிட்ட வசதிகள் என மொத்தம் ரூபாய் ஒரு கோடியே, 40 லட்சம் மதிப்பிட்டில் அமைக்கப்பட்டது.

இந்த புதிய கட்டிடத்தின் திறப்பு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மெட்ரோஸ் ரவுன் டேபிள் 1 சேர்மன் வருண் ஆச்சார்யா, சிரிஷ் பாலகிருஷ்ணன், சார்ஜ்ர்பீ நிறுவனத்தின், ராஜாராமன் சந்தானம் ஆகியோர் கலந்து கொண்டு புதிய கட்டிடத்தை மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

உடன் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, தலைமை ஆசிரியர் ரவி காசி வெங்கட்ராமன், பெற்றோர் ஆசிரியர் தலைவர் ராஜ் குமார், தனியார் தொண்டு நிறுவன நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாணவர்கள், மாணவ, மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.



## பணி நிறைவு நூலகருக்கு பாராட்டு விழா

கல்லல், ஆக.31-

கல்லல் கிளை நூலகத்தில் 17 ஆண்டுகளாக பணிபுரிந்து வந்த கிளை நூலகர் வசந்த செல்வி ஆகஸ்ட் 31, 2025 அன்று பணி நிறைவு பெறுகிறார். இதையொட்டி அவருக்கு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் கல்லல் கிளை சார்பாக பாராட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு தலைமையேற்ற கிளைச் செயலாளர் பிரபு கல்லலில் தனது நூலகர் பணியை மிகவும் திறம்பட செய்து அதிகமான வாசகர்களையும், மாணவர்களையும் நூலகத்திற்கு வரவைத்த பெருமைக்குரியவர் என்று பாராட்டினார். கிளையின் துணைத் தலைவர் இராஜு நூலகப் பணியில் அவரின் சேவை என்றும் பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டு பேசினார். கிளை உறுப்பினர் ரவிச்சந்திரன் வாழ்த்துரை வழங்கினார். சிவகங்கை தலைமை நூலக கண்காணிப்பாளர் சாமிநாதன், முதல் நிலை நூலகர்கள் பிரபு வெங்கட், முத்துக்குமார், இரண்டாம் நிலை நூலகர்கள் ராமகிருஷ்ணன், நாகராஜன் மற்றும் நூலக நண்பர்கள் பாராட்டு தெரிவித்தனர். ஏற்புரை வழங்கிய நூலகர் வசந்த செல்வி பொதுமக்களும் மாணவர்களும் நூலகத்தை தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். சங்கம் சார்பாக.நூலகருக்கு பாராட்டுச் சான்றிதழும், நினைவுப் பரிசாக நூலும் வழங்கப்பட்டது. இவ்விழாவில் நூலகரின் குடும்ப உறுப்பினர்களும், உறவினர்களும், வாசகர்களும் கலந்து கொண்டனர்.




■ சிவகங்கை ஆர்டிசி ஐடிபிபி, தேசிய விளையாட்டு தினத்தை சிறப்பான முறையில் கொண்டாடியது. அருகிலுள்ள இலுப்பைக்குடி கிராமம் மற்றும் அரசனூர் கிராமங்களில் உள்ளூர்வாசிகளுடன் கை மல்யுத்தம், சைக்கிளிங் மற்றும் தூய்மை இயக்கம் போன்ற பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஜஸ்டின் ராபர்ட் "ஆரோக்கியமான உடலுக்கு ஆரோக்கியமான மனம் உண்டு" என்ற கருத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

## ட்ரம்ப் வரிக்கு இந்தியா பதிலடி: அமெரிக்காவுக்கான அனைத்து அஞ்சல் சேவைகளும் நிறுத்தம்

புதுடெல்லி, ஆக.31-

இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள 25 சதவீத கூடுதல் வரி விதிப்பு கடந்த புதன்கிழமை (ஆக.27) அமலுக்கு வந்தது. ஏற்கெனவே விதித்த 25 சதவீத வரியோடு இந்த கூடுதல் 25 சதவீதமும் சேர்ந்துள்ள நிலையில், 50 சதவீத வரி விதிப்பு இந்தியாவின் ஏற்றுமதியை கடுமையாக பாதிக்கும் என்று நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால், தொழிலாளர் சார்ந்த துறைகள் ஏற்றுமதி 70 சதவீதம் அளவுக்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த வரிவிதிப்புக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவிற்கான அனைத்து அஞ்சல் சேவைகளையும் இந்தியா நிறுத்தியுள்ளது.

கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் 100 டாலர் வரையிலான பரிசுகள் உட்பட அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் அனைத்து வகை அஞ்சல்களையும் நிறுத்தி வைப்பதாக தபால் துறை அறிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் 22 அன்று, 100 டாலர் வரையிலான மதிப்புள்ள ஆவணங்கள்/கடிதங்கள் மற்றும் பரிசுகளைத் தவிர, அமெரிக்காவிற்கு அஞ்சல் சேவைகளை முன்பதிவு செய்தல் மற்றும் அனுப்புவதை ஆகஸ்ட் 25 முதல் நிறுத்தி வைப்பதாகத் துறை தெரிவித்திருந்தது..

முன்னதாக அஞ்சல் துறை வெளியிட்ட அறிவிப்பில் "புதிய விதிமுறைகளின் காரணமாக ஆகஸ்ட் 25க்குப் பிறகு சரக்குகளை ஏற்க முடியாது என்று அமெரிக்காவுக்குச் செல்லும் விமான நிறுவனங்கள் இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளன. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, கடிதங்கள்/ஆவணங்கள் மற்றும் 100 அமெரிக்க டாலர் வரை மதிப்புள்ள பரிசுப் பொருட்கள் தவிர, ஆகஸ்ட் 25 முதல் அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் அனைத்து வகையான அஞ்சல் பொருட்களின் முன்பதிவையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அஞ்சல் துறை முடிவு செய்துள்ளது" என்று கூறப்பட்டிருந்தது.

## ஆபரேஷன் சிந்தூரில் 50க்கும் குறைவான ஆயுதங்களே பயன்படுத்தப்பட்டன: இந்திய விமானப் படை தகவல்

புதுடெல்லி, ஆக.31-

ஆபரேஷன் சிந்தூரில் 50க்கும் குறைவான ஆயுதங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாக இந்திய விமானப் படையின் துணைத் தலைவர் ஏர் மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரி தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை தொடர்பாக தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய ஏர் மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரி, "ஆபரேஷன் சிந்தூருக்குப் பிறகு பொதுமக்கள் மத்தியில் இந்திய விமானப் படை உரையாற்றுவது இதுவே முதல்முறை. பஹல்காமில் தாக்குதல் நடந்த மறுநாள், மூன்று படைகளும் அதனதன் தலைமையகங்களில் கூடி தாக்குதலுக்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசித்தன. பின்னர், மூன்று படைகளும் தங்களின் செயல்பாட்டு விருப்பங்கள் குறித்த அறிக்கையை ஏப்ரல் 24ம் தேதி ஒரு உயர்மட்டக் குழுவிடம் வழங்கின.

மூன்று படைகளின் அனைத்து விருப்பங்கள் குறித்தும் விவாதிக் கப்பட்டன. அதன் அடிப்படையில் நாங்கள் இலக்களை பட்டியலிட்டோம். அந்த வகையில், மூன்று படைகளின் விருப்பங்களின் பட்டியலில் இலக்குகள் அதிக எண்ணிக்கையில் இருந்தன. அவற்றை நாங்கள் ஒன்பதாகக் குறைத்தோம். தாக்குதலுக்கான தேதி, நேரம் மட்டுமே முடிவு செய்ய வேண்டி இருந்தது. மே 5ம் தேதி அந்த முடிவை எடுத்தோம். உங்களுக்குத் தெரியும், 6ம் தேதி இரவுக்கும் 7ம் தேதி அதிகாலைக்கும் இடையே நாங்கள் தாக்குதலை தொடங்கிவிட்டோம்.



இதில், நாங்கள் முக்கியமாகக் கருதுவது என்னவென்றால், தாக்குதல் இலக்குகளை நாங்கள் 50க்கும் குறைவான ஆயுதங்களைக் கொண்டே முடித்துவிட்டோம். புதுடெல்லியின் உயர்மட்ட உத்தரவுகள் 3 தெளிவான நோக்கங்களைக் கொண்டிருந்தன. பதில் வலுவாக வெளிப்படையாக இருக்க வேண்டும், எதிர்கால தாக்குதல்களை தடுக்கும் நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும், முழு அளவிலான மோதலாக விரிவடைவதற்கு முழுமையான செயல்பாட்டு சுதந்திரத்தைப் பெற வேண்டும்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது நாம் எதிர்பார்ப்பது போலவே, வான் பாதுகாப்பு திறனின் முக்கியத்துவம் பெருமளவில் அதிகரித்துள்ளது. இதுபோன்ற சூழ்நிலையில் சுதர்சன் சக்ரம் அமைப்பு நிச்சயமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும்" என தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகள் மீது கடந்த ஏப்ரல் 22ம் தேதி தாக்குதல் நடத்தினர். இதில், 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதிகள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, அந்த பயங்கரவாத முகாம்களை குறிவைத்து இந்திய ராணுவம் தனது தாக்குதலை மே 67 தேதிகளில் தொடங்கியது.

இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் நோக்கில் பாகிஸ்தான் ராணுவம் தாக்குதலை நடத்தியது. எனினும், அதனால் இந்திய தரப்புக்கு உயிர்ச்சேதத்தை ஏற்படுத்த முடியவில்லை. பாகிஸ்தான் ராணுவத்தின் தாக்குதலுக்கு இந்திய ராணுவம் பதிலடி கொடுத்ததில், அதன் விமானப்படை விமானங்கள் பல கடும் சேதத்தை சந்தித்தன. இதனால், பாகிஸ்தான் ராணுவ உயரதிகாரி, இந்திய ராணுவ உயரதிகாரியை தொடர்பு கொண்டு வேண்டுகோள் விடுத்ததன் பேரில் இந்தியா தனது தாக்குதலை மே 10ம் தேதி நிறுத்தியது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161